**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 27** **நாள்: 12.01.2026**

**மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள், அப்துல் ரசாக் தெருவில் சிங்கார சென்னை 2.0 நிதியில் ரூ.23.13 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் காய்கறி அங்காடி கட்டும் பணியினை இன்று (12.01.2026) அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு-142, அப்துல் ரசாக் காய்கறி அங்காடிக்கு மாற்றாக, சிங்கார சென்னை 2.0 நிதியில் ரூ.23.13 கோடி மதிப்பீட்டில் புதியதாக அழகிய வடிவமைப்பில் நவீன வசதிகளுடன் காய்கறி அங்காடி கட்டும் பணியினை இன்று (12.01.2026) அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், காய்கறி சந்தையில் உள்ள வணிகர்களுக்கு மாற்று காய்கறி சந்தையில் வியாபாரம் செய்வதற்கான அடையாள அட்டைகளை வழங்கினார்.

சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு-142க்குட்பட்ட பஜார் சாலை சந்திப்பு, அப்துல் ரசாக் தெருவில் உள்ள காய்கறி மற்றும் மளிகை கடைகளை உள்ளடக்கிய பழுதடைந்த பழைய காய்கறி அங்காடியினை இடித்துவிட்டு, அதே இடத்தில் ரூ.23 கோடி மதிப்பீட்டில் 4,400 சதுர மீட்டர் பரப்பளவில் வாகன நிறுத்த வசதி, கழிப்பறை, 200 கடைகளுடன் புதிய அழகிய வடிவமைப்பில் நவீன வசதிகளுடன் காய்கறி அங்காடி கட்டப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சியில், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., துணை ஆணையாளர்கள் திரு.வி.சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., (பணிகள்), திரு.எச். ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., (மத்திய வட்டாரம்), மண்டலக் குழுத் தலைவர்கள் திரு.எம்.கிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., (கோடம்பாக்கம்), திரு.ஆர்.துரைராஜ் (அடையாறு), மண்டல அலுவலர் திரு.செ.வெங்கடேஷ், மாமன்ற உறுப்பினர்கள் திரு.எம்.ஸ்ரீதரன், திரு.தா.மோகன்குமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது**

இந்த மார்க்கெட்டில் உள்ள மீன் மார்க்கெட், காய்கறி மார்க்கெட் உள்ளிட்ட அனைத்து கடைகளையும், அனைத்து வியாபாரிகளையும் நான் தனித்தனியே அறிவேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை மாநகரின் வணக்கத்திற்குரிய மேயராக வருவதற்கு 1996க்கு முன்னாள் வரை இந்த இடமானது மாட்டு வண்டிகளில் குப்பைகளை எல்லா இடங்களிலும் சேகரித்து, இங்கே குப்பைகளை கொட்டி மாட்டு வண்டிகளை நிறுத்தியிருப்பார்கள். மாட்டு வண்டி சுப்பிரமணி சாலைக்கு சென்று குப்பையை ஏற்றி விட்டால், அது மாட்டு வண்டி ஓட்டுநர் இல்லாவிட்டாலும், அவர் தூங்கிவிட்டாலும் பரவாயில்ல அந்த வண்டி நேரா இந்த இடத்திற்கு வந்துவிடும். அதற்கு வழியும் சொல்லத் தேவையில்லை.

நாம் இப்போது பேசிக் கொண்டிருக்கும் இடம் குப்பை கொட்டப்பட்டு, மாட்டு வண்டியும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இடம்.

நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வணக்கத்திற்குரிய மேயராக பொறுப்பேற்றவுடன் முதலில் இதைத்தான் சரிசெய்தார். மாட்டு வண்டியைத் தவிர்த்து, அதற்கு மாற்றாக சிங்கப்பூரில் உள்ள நிறுவனத்துடன் இணைந்து முதன்முறையாக குப்பைகளை மூடி எடுத்துச் செல்லக்கூடிய லாரிகளை அறிமுகப்படுத்தியது இந்தியாவிலேயே சென்னையில்தான். இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் குப்பையை எடுத்துச் செல்ல மாட்டு வண்டியைத் தான் பயன்படுத்தினார்கள்.

நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிங்கப்பூரில் உள்ள ஒனக்ஸ் நிறுவனத்துடன் ஒப்பந்தம் போட்டு மூன்று மண்டலங்களில் செயல்படுத்தப்பட்டது. மாட்டு வண்டியில் குப்பை எடுத்துக் கொண்டு வந்தால் அனைத்து இடங்களிலும் கொட்டி காணப்படும். 96க்கு முன்னாள் அப்படி தான் நிர்வாகம் இருந்தது. அந்தநிலையை மாற்றி நவீனப்படுத்தியது தமிழ்நாட்டின் இன்றைய முதல்வர். அந்த பணியில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு மாநகராட்சியில் நிரந்தரமாக பணிபுரியும் வகையில் வேலை கொடுத்து புரட்சி செய்தார்கள்.

இப்போது 94 வருடங்களுக்கு பிறகு இந்த மார்க்கெட் பகுதியினை புதிதாக எடுத்து கட்டும் பணியினை இன்று தொடங்கப்பட்டுள்ளது. எந்த ஒரு இடைத்தரகரும், இடையூறும் இல்லாமல் எந்தவிதமான சின்ன பாதிப்பும் இல்லாமல் இங்குள்ளவர்களே முடிவெடுத்து எடுத்துக் கட்டும் சொந்த மார்க்கெட் பகுதியாக இருக்க வேண்டும் என்று கூறியுள்ளேன்.

சின்ன கடை மற்றும் பெரிய கடை உள்ளிட்ட இந்த மார்க்கெட் பகுதியில் 5 விதமான கடைகள் என மொத்தம் 200 கடைகள் உள்ளது. 200 கடைகளை 5 தரப்பு கடைகளாக பிரித்துள்ளார்கள். இதற்கு 5 நபர்களின் பெயர்கள் கொடுத்தால், அவர்களைக் கொண்டு ஒரு குழு அமைக்கப்படும். இந்த மார்க்கெட் பற்றிய முழு முடிவெடுப்பது இந்த ஐந்து நபர்கள். நீங்கள் 20ஆம் தேதி இங்கிருந்து காலி செய்து, தற்காலிகமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மார்க்கெட் பகுதியில் யாருக்கு எங்கு என்பதை முடிவு செய்து விற்பனை செய்யுங்கள். இந்தக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டவுடன் யாருக்கு எந்த கடை என்பதை இந்த 5 நபர்கள் கொண்ட குழு முடிவு செய்து வழங்குவார்கள். கட்டிக் கொடுக்கும் போது இருக்கும் கடைகளை போலவே பராமரிக்க வேண்டியதும் இந்த 5 நபர்கள் கொண்ட குழு பொறுப்பெடுத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு நீங்கள் அமைத்துக் கொண்டால் நலமாக இருக்கும்.

கடைகளை கட்டிக் கொடுக்கும் போது இருப்பதைப் போல நீங்கள் தொடர்ந்து பராமரித்து வந்தால், சுகாதாரமாக இருப்பதைக் கண்டு வியாபாரம் இரண்டு மடங்காகப் பெருகும். எனவே, இந்த 5 நபர்கள் கொண்டு குழுவினை இந்த கூட்டம் முடிந்தவுடன் நீங்களே அமைத்துக் கொண்டு பெயர்களை கொடுத்து விடுங்கள்.

இந்தக் கட்டடம் கட்டி முடிக்கும் வரை நரிக்குறவர் பள்ளி அருகில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக மார்க்கெட் பகுதியில் இங்குள்ள வியாபாரிகள் மாற்றம் செய்யப்படுவர் என்பது பத்திரிகையின் வாயிலாக பொதுமக்களுக்கு தெரிந்தால் தான் இங்குள்ள வியாபாரிகளுக்கு வியாபாரம் ஆகும். இந்தக் கட்டடம் 6 மாதங்களில் கட்டி முடிக்கப்பட உள்ளது.

இதன் தொடர்ச்சியாக, இங்குள்ள மீன் மார்க்கெட்டையும் நவீனப்படுத்துவதற்கு காரணீஸ்வரர் கோயில் நிர்வாகத்துடனும், என்டோன்மெண்ட் வாரியத்துடனும் பேசியுள்ளேன். சிஎம்டிஏ சார்பில் இங்குள்ள மீன் மார்க்கெட்டையும், கறி மார்க்கெட்டையும் நவீனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இந்த காய்கறி மார்க்கெட் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வந்தவுடனே, இந்த மீன் மார்க்கெட்டை நவீனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு ஜூலை மாதத்திற்கு பிறகு இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

இந்த மார்க்கெட் ஒட்டியிருக்கிற மார்க்கெட் சுரங்கப்பாதை, பவளவனம் சுரங்கப்பாதை, அரங்கநாதன் சுரங்கப்பாதை, ஆலந்தூர் ஆட்டுத்தொட்டி சுரங்கப்பாதை, காந்தி மண்டபம் மேம்பாலம் அனைத்தும் இந்த ஆட்சியில் கட்டியது. இப்போது அண்ணாசாலையில் ஒரு பாலம் கட்டப்பட்டு வருகிறது. இனிமேல் பாரிஸ்,

கொத்தவால்சாவடிக்கு செல்ல வேண்டுமென்றால் இங்கிருந்து இந்த பாலம் வழியாக நேரடியாக தேனாம்பேட்டையில் இறங்கலாம். சைதாப்பேட்டையில் கட்டப்பட்டு வரும் இரும்பு பாலம் இரண்டு மாதங்களில் தயாராகி விடும். அந்த பாலம் வழியாக ஜோன்ஸ் சாலை சிக்னல், தாடன்டர் நகர் சந்திப்பு, முனியப்ப பிள்ளை சத்திரம், பேன்பேட்டை தாண்டி சிஜடி நபர், ஒய்எம்.சி.ஏ. அதுக்கப்புறம் தேவர் சிக்னல், அதைத் தாண்டி எல்.ஆர். சாமி, எஸ்ஐடி, எல்டாம்ஸ் சாலை சிக்னல் இவ்வளவு சிக்னலையும் நீங்க ஒரு ஐந்து நிமிஷத்துல கிராஸ் பண்ணி 3 கிலோ மீட்டருக்கு அந்தப் பக்கம் போய் பிரிட்ஜ்ல இறங்கலாம். அந்த பிரிட்ஜ் இன்று ரெண்டு மாசத்துல திறக்கப் போறாம். சைதாப்பேட்டைக்கு அது ஒரு பெரிய அளவிலான வாய்ப்பு.

அதே மாதிரி இந்தப் பக்கம் வேளச்சேரிக்கு போறீங்கன்னா அங்க ஒரு 3.20 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒரு மேம்பாலம் கட்டுவதற்கு மிக விரைவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அடிக்கல் நாட்டவுள்ளார்கள். சின்னமலை எல்டாம்ஸ்ல இருந்து ஏறினால் நேராக குருநானக் தாண்டி போய் இறங்கலாம். அப்போ நீங்க அங்கிருந்து போகும்போது இந்த நீச்சல் குளம் பக்கத்துல இருக்குற சாலை, கன்னிகாபுரம், அஞ்சு பர்லாங் ரோடு, நேரு நகர், பீனிக்ஸ் மால், 100 அடி சாலை இதெல்லாத்தையும் தாண்டி போய் 3.20 கிலோமீட்டருக்கு அந்தப் பக்கமா இறங்கலாம். அப்படி ஒரு மேம்பாலம் கட்டும் பணி விரைவில் தொடங்கப்படவுள்ளது.

இப்போ மத்திய கைலாஷ்ல ஒரு பாலம் கட்டப்பட்டு வருகிறது. இதுக்கு முன்னால் ஓஎம்ஆருக்கு, ஈசிஆருக்கு போகணும்னா சர்தார் படேல் சாலையில் அவ்வளவு டிராபிக்ல மத்திய கைலாஷ்ல நிக்க வேண்டியது இருக்கும். இப்போ அந்த ராஜீவ் காந்தி சாலைக்கு ஒரு யூ-டைப் பாலம் ஒன்னு கட்டப்பட்டு வருகிறது. இன்னும் ஒரு மாசத்துல அந்த வேலை முடிஞ்சிரும்.

இந்த மாதிரி சுத்தி சுத்தி மேம்பாலங்கள். சைதாப்பேட்டையில வந்துள்ளது. தமிழ்நாட்டிலேயே மிகச்சிறந்த பல்நோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை இன்றைக்கு பயன்பாட்டில் இருக்கிறது. அதே மாதிரி இதே சைதாப்பேட்டையில இந்தியாவிலேயே பிரத்யேகமான வயது முதிர்ந்தவர்களுக்கான மருத்துவமனை ஒன்னும் சைதாப்பேட்டையில இருக்கிறது.

உங்களுக்கு எல்லாருக்கும் தெரியும் 60 வயதைக் கடந்தவர்களுக்கு ஒரு பிரத்யேகமான மருத்துவமனை ஒன்று இருக்கிறது என்றால் இந்தியாவிலேயே சைதாப்பேட்டையில மட்டும்தான் இருக்கிறது. அந்த மருத்துவமனையும் இன்னைக்கு பெரிய அளவில் பயன்பாட்டில் உள்ளது.

இன்னொரு மகிழ்ச்சியான செய்தி. இந்த இரண்டு மருத்துவமனைகளோடு மட்டுமில்லாம அதே வளாகத்தில் ஒரு ஆறரை ஏக்கர் நிலப்பரப்பில் வருகிற 21ஆம் தேதி அடுத்த வாரம் நமக்கு பசுமைத் தீர்ப்பாயம் அனுமதி தர்றாங்க. அது என்னன்னா ஒரு 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உலகத்திலேயே பெரிய குழந்தைகளுக்கான மருத்துவமனை. ஆராய்ச்சி மற்றும் மருத்துவ சேவை. ரிசர்ச் அண்ட் ஹாஸ்பிடாலிட்டி, மருத்துவ வசதியுடன் 500 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ளது. அதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டித் தொடங்கி வைக்கவுள்ளார். இது இன்னொரு 15 நாள்ல நடக்கப்போகுது. இவையாவும் வந்துவிட்டால் சைதாப்பேட்டைக்கு என்ன பெருமை என்றால் சைதாப்பேட்டையில் தமிழ்நாட்டிலேயே சிறந்த பல்நோக்கு மருத்துவமனை, இந்தியாவிலேயே பிரத்யேகமான வயது முதிர்ந்தவர்களுக்கான மருத்துவமனை, உலகத்திலேயே பெரிய குழந்தைகளுக்கான மருத்துவமனை ஆகியவை சைதாப்பேட்டையில் வரப் போகிறது.

இதற்கெல்லாம் காரணம் நீங்க தான். நீங்க எல்லாம் ஓட்டு போட்டதோட விளைவா மே மாசம் 2021-ல நம்ம கவர்னர் மாளிகையில ஒரு கரகரத்த குரல் 'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆகிய நான்' அப்படின்னு சொல்ல வச்சீங்கள்ல, அதுதான் இந்த மாற்றத்துக்கெல்லாம் காரணம். எனவே மீண்டும் இந்த மருத்துவமனைகள் எல்லாம் இங்கே வருவது என்பது சைதாப்பேட்டையின் வளர்ச்சிக்கு மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் எந்த அளவுக்கு உறுதுணையாக இருக்கிறார் என்பதற்கான சான்று என்பதை மகிழ்ச்சியோடு எடுத்துக் கூறி.

இந்தக் கட்டடம் கட்டுவதற்கு அனைத்து பணிகளையும் திட்டமிட்டு செயல்படுத்தி சரியா ஆறாவது மாசம் இதே திறப்பு விழாவுக்கு எங்களை கூப்பிட வேண்டும். வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி வணக்கம் எனத் தெரிவித்தார்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**